www.tamilarangam.net

# புதிய பாதை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகாரபூர்வ ஏடு — தமிழகத்தில் 1-00

காதம் 3 — நவம்பர்/டிசம்பர் 1985 — அன்பளிப்பு 2-00 — சுவடு 11;12

## இஸ்லாமியருக்கெதிரான சிறிலங்கா அரசின் புதிய ஒடுக்குமுறை

1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின் நாடாளுமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறைகள் ஒவ்வொன்றையும் நன்றாக நோக்குமிடத்து தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு திட்டங்களும், நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு சட்டங்களும் சிறுபான்மை இன மக்களுக்குள்ள உரிமைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் அமையக்கூடியதாக வழிவகை செய்வதை விடுத்து, எப்படியாவது அம்மக்களின் உரிமைகளை இயன்றளவு நசுக்கிவிடவே கொண்டுவரப்பட்டதாக அமைந்துள்ளதை யாரும் மறுக்கமாட்டார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தில் — சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு என அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புகளுக்கான 29வது சரத்து, நியமன அங்கத்துவம், மேல்சபை போன்றவை இல்லாமல் ஆக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து 2/3 பங்கு பெரும்பான்மை ஆதரவோடு ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் மேற்கூறிய அந்நிலையை உறுதிப்படுத்தியதோடு விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தையும் அறிமுகப்படுத்தியது. இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இனரீதியான அடிப்படையில் அமையாது கட்சிரீதியான அடிப்படையில் அமைந்தது. கட்சித் தலைமையின் அடிவருடிகளுக்கு நாடாளுமன்றத்தில் இடம்பிடித்துக் கொடுக்கும் ஒரு அமைப்பாகவே உருவெடுத்தது.

இன்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்தெரிவுக் குழு இவ்விகிதாசார முறையை இன்னும் விரிவுபடுத்தி அறிக்கை சமர்ப்பிக்கவே நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் சிறிலங்காப் பிரதமர் ஆர். பிரேமதாச, அமைச்சர் லலித் அதுலத்முதலி, கிராமிய கைத்தொழில் அமைச்சர் தொண்டமான், பிரதி அமைச்சர் அப்புசாலி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா ஆகியோரும் வேறுசிலரும் அங்கம் வகிக்கின்றனர். இவர்களது இடைக்கால யோசனைப்படி ஏற்கனவேயுள்ள விகிதாசார முறையைச் சற்று வேறுபடுத்தி, கட்சிக்கு வாக்கு அளிக்காமல் கட்சிகளால் நியமிக்கப்படும் தனித்தனி அபேச்சகர்களுக்கே வாக்கு அளிக்கப்படும், அப்படி கட்சி அபேச்சகர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் கட்சிக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளாகக் கொள்ளப்படும். அத்தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை பிரதிநிதிகள் எனத் தீர்மானிக்கப்படும். அப்படித் தெரிவு செய்யப்படுபவர்கள் தனிப்பட்ட முறையில் யார் கூடுதலான தொகை வாக்குகளைப் பெற்று இருக்கிறார்களோ அவர்களே கட்சியின் மொத்த வாக்குகளின் அடிப்படையில், உரிய தொகையினர் தெரிவு செய்யப்படுவர்.

இந்த முறையை நன்கு பரிசீலித்துப் பார்க்கையில் இலங்கை முழுவதிலும் பரந்து வாழும் இஸ்லாமிய மக்கள் ஓரிரு மாவட்டத்தைத் தவிர மற்றெல்லா மாவட்டத்திலும் கணிசமான தொகையில்லாத காரணத்தால் எந்தவொரு இஸ்லாமியரையாவது தெரிவு செய்கின்ற வாய்ப்பைப் பெறமாட்டார்கள் என்பது தெளிவாகின்றது. உதாரணமாக ஒரு தொகுதியிலுள்ள ஐ. தே கட்சியைச் சேர்ந்த ஒரு சிங்கள வாக்காளர் அக்கட்சியில் போட்டியிடும் சிங்கள வேட்பாளருக்கு வாக்கு அளிப்பாரே தவிர அக்கட்சியைச் சேர்ந்த இஸ்லாமிய வேட்பாளருக்கு வாக்கு அளிக்கமாட்டார். இந்நிலையில் புதிதாக அமையவிருக்கும் 196 அங்கத்தவர்களை கொண்ட நாடாளுமன்றத்தில் குறைந்த பட்சம் 16 அங்கத்தவர்களை

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்குக் கிடைத்திராத ஒரு அந்தஸ்தை சிறிலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு வழங்கியிருக்கிறது. அதுதான் எந்தவித வர்க்க, சமூக, மத வேறுபாடுகளின்றி சகல தமிழ் பேசும் மக்களுக்கும், வழங்கப்பட்ட ''பயங்கரவாதிகள்'' என்னும் அந்தஸ்தாகும். இதற்குப் பரிசாகத் துப்பாக்கிரவைகளையும், சித்திரவதைகளையும், பொருட் சேதங்களையும் கொடுத்துள்ளது. இந்த நிகழ்ச்சி எந்தவித தங்கு தடைகளுமின்றிப் பரந்த அளவில் நடாத்தப்பட்டு வருகின்றன. தமிழ்பேசும் மக்களை ஒழிக்கும், திட்டமிட்ட இந்நடவடிக்கைக்கு அரசு கூறும் விளக்கம் பயங்கரவாதிகளை ஒழிப்பதென்பதாகும். இச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் செயற்படும் நாம், உண்மையில், உலகில் எங்கும் வாழும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெறாத விலைமதிப்பற்ற பொறுப்பு, எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது தமிழீழத்தில் வாழும் மக்களின் முழுமையான விடுதலைக்காகப் போராடித் தமது உரிமைகளுடன் வாழக்கூடிய ஒரு நாட்டை அமைப்பதாகும்.

இந்நடவடிக்கையைப் பூண்டோடு அழிக்கும் நோக்கோடு சிங்கள இனவாத அரசு தனது அரச இயந்திர சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்துவதோடு, மட்டுமல்லாது சர்வதேச சதிகாரக் கும்பலுடனும் சேர்ந்து முன்னரிலும் திறமையான புதிய அணுகுமுறைகளுடன் இனஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதையும், அவ்வப்போது நேரடியாகச் சர்வதேசச் சதிகாரர்களையும் இனஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதையும், நாம் காணக்கூடியதாக உள்ளது. இந் நடவடிக்கைகளை இலகுவாக்கும் நோக்குடனும், தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு மூலைமுடுக்கையும், தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நோக்குடனும், இராணுவ முகாம்கள், கடற்படைத்தளங்கள், விமானத்தளங்கள், பொலிஸ் நிலையங்கள், மற்றும் ஊர்காவற்படை என்ற பெயரில் குண்டர் அமைப்புகளையும் விஸ்தரித்துள்ளது.

தமிழீழ மண்ணில் இவ்ஏகாதிபத்தியக் கைக்கலிகள் காடைத்தனம் புரியும் போதெல்லாம், விடுதலை விரும்பிய பலஉயிர்கள் பறிக்கப்படுகின்றது. இன்றைய நிலையில் எமது மக்களின் வாழ்க்கைக் காலமும், அவர்களின் செயற்பாடும், இக்கைக்கூலிகளின் துப்பாக்கி ரவைகளினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. தொடர் நடவடிக்கையாக இது நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழீழத்திலுள்ள முழு மக்களும், அழிந்தொழிந்து விடுவார்களோ என மக்கள் அஞ்சுகிறார்கள். அவ்வச்சத்திலிருந்தும், ஒரு விடிவைக் காணத்துடிப்பதும் நியாயமானதேயாகும் இதனால்தான் இன்று தமது எண்ணங்களில் நம்பிக்கை உணர்வைத் தோற்றிய, விடிவைக் காணத்துடிக்கும் விடிவெள்ளிகளான விடுதலைப் போராளிகள் பற்றி நிறையவே சிந்திக்கவும், விமர்சிக்கவும் தொடங்கியுள்ளார்கள். இவ்வளவுகாலமும் வலதுசாரி முதலாளித்துவச் சக்திகளின் வாய்ப்பேச்சில் தமது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காது கண்மூடித்தனமாக வாழ்ந்து வந்த மக்கள் அம்மாயையிலிருந்து விடுபட்டு ஒருபடி மேலோங்கிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மக்களின் விடிவிற்காய், இழந்த உரிமைகளின் மீட்சிக்காய்ப் போராடத் தொடங்கிய இயக்கங்களை ஆரம்பத்தில் மக்கள் வெவ்வேறு கண்கொண்டு நோக்காது 'எமது பிள்ளைகள்' 'விடுதலைப்போராளிகள்' என்னும் அடிப்படையிலேயே தம்மாலான சகல ஒத்துழைப்புகளையும் செய்துவந்தனர். ஆனால் விடுதலை வேண்டிப் போராடியவர்களோ மக்களின் உணர்வுகளையோ, இழப்புகளையோ, அன்றித் தாக்கங்களையோ கருத்தில் கொள்ளாது சுத்த இராணுவ நடவடிக்கையாகத் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டனர்; இது போன்ற திட்டமிடப்படாத தாக்குதல்களும், போராட்டங்களின் அதிதீவிரவாதப் போக்குகளும், தாக்குதல் நடத்தமுடியாதவாறு எதிரிப்படைகள் பாதுகாப்புகளைப் பலப்படுத்தும்போது சமூக விரோதச் செயல்களில்தான் இவ்விளைஞர்களை ஈடுபட வைக்கும். தம்களின் வீரதீரச் செயல்களை மக்கள் மத்தியில் காட்டவும் முனைவர். இதன் வளர்ச்சியானது மொத்தத்தில் பாசிச சர்வாதிகாரத்திற்கே இட்டுச் செல்லும். இப்படியான வளர்ச்சி இன்று தமிழீழத்தில் தோன்றுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்நடவடிக்கைகளால் விரக்தியடைந்த மக்களின் பார்வையிலும் மாறுதல் அடையத் தொடங்கியுள்ளது. இதன் விளைவே, இன்று விடுதலை இயக்கங்களுக்கு எதிரான மக்களின் கண்டனங்கள், விமர்சனங்கள், ஊர்வலங்கள் போன்றவையாகும்.

இப்படியாக மக்களின் உணர்வுகளிலிருந்து அந்நியப்படும் அதாவது தன்னிச்சையாகத் தான் தோன்றித்தனமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடும்

(11ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேச விடுதலையும், தேசிய இனப்பிரச்சனையும்:

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு விடுதலை யுத்தமா? அல்லது தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சியா? என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

பெயரைக் கொண்டு பதிலைச் சொல்லிவிட்டமுடியாது. 1977ற்கு முன்புவரை இது தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையாகத்தான் இருந்தது. மத்தியத்துவப் படுத்தப்பட்ட ஒரு இலங்கை அரசின் கீழ் இலங்கைத் தமிழர்களும்; வட மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் வாழும் இஸ்லாமியர்களும் தமிழ் தேசிய உரிமைகளுக்காக நடாத்தும் போராட்டமாகவே இருந்தது.

1977ஐ ஒரு அண்ணளவான கால எல்லையாகக் கொண்டால், அதன் பின் கூட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இதைத் தேசிய இனப்பிரச்சனையாகவே கருதினார்கள்; தமிழீழத்தைப் பெயராகக் கொண்ட, இலங்கை ஒன்றையாட்சியின் கீழ் ஒரு அரசியல் அமைப்பையே விரும்பினார்கள். ஆனால் இந்த நேரத்திலேயே 'இரட்டைத் தேசதத்துவம்' (Two Nation Theory) முன் வைக்கப்பட்டது. இதன்படி இப்போராட்டம் தமிழீழத் தேசம் தனது முழு இறைமைக்காக எடுக்கும் முயற்சியாகவே அது கருதப்பட்டது. அவ்விதமானால் இது தேச விடுதலை யுத்தமாகும்.

தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான ஒரு பிரதேச இயக்கமாக இருந்தால், இருக்கும் ஆட்சி அமைப்பினுள் இப்பிரச்சனைக்கான சில வேலைத் திட்டத்தை மாத்திரமே கொண்டிருக்கும் தேச விடுதலையாக இருந்தால் விடுவிக்கப்படும் தேசத்தின் ஒட்டு மொத்த பிரச்சனைக்கான தீர்வை அது கொண்டிருக்கும்— (சோசலிசமே அத்தீர்வு). 70ம் ஆண்டுகளின் பிற்பகுதி வரை இது ஒரு தேச விடுதலையாக இராததன் காரணத்தால் சோசலிச நாட்டமுள்ள சக்திகள், இலங்கை முழுவதற்கும் உள்ள சோசலிச வேலைத் திட்டத்துடன் கூடிய கட்சியின் கீழேயே அணிதிரண்டு இருந்தார்கள். இது தேசவிடுதலை என்ற கட்டத்தை அடையும்போது அவர்கள் சோசலிசத் தமிழீழத்தை நோக்கமாகக் கொண்ட சக்திகளைச் சூழ அணி திரண்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இது தமிழீழம் என்ற தேசத்தின் ஆட்சி இறைமை சம்பந்தப்பட்ட பிரச்சனையாக உள்ளதன் காரணத்தால், அது இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையாக மாத்திரம் இருக்க முடியாது. இங்குள்ள இஸ்லாமிய மக்களினதும், மலையக மக்களினதும் பிரச்சனையாகும். அதாவது இது தமிழீழத்தில் தமிழ் பேசும் மக்கள் முழுமையினதும் பிரச்சனையாகும். அவர்களது பிரச்சனை மாத்திரமல்ல தமிழீழத்தில் ஒற்றுமையாக வாழ விரும்புகிற சிங்கள மக்களினதும் பிரச்சனையாகும்.

தமிழீழப் போராட்டம் என்ற தேச விடுதலைப் பிரச்சனை, தனக்குள் தேசிய இனச் சிக்கல்களையும் கொண்டுள்ளது என்பதே இதன் அர்த்தமாகும். இதைச் சரியாகப் புரிந்து கொண்டு கையாளாவிட்டால் தமிழீழப் போராட்டம் வெற்றி தரமாட்டாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தற்போதைய அரசியல் நிலையில் ஒரு தேச விடுதலைப் போராட்டம் என்பதே உண்மை. இந்த தற்போதைய அரசியல் நிலை பின்வருமாறு அமையும்.

- அ. சிங்கள ஆளும் வர்க்கம் சிங்களப் பேரினவாதத்தில் இருந்து இம்மியளவும் இறங்க தயாராய் இல்லாத நிலை.
- ஆ. சிங்களப் புரட்சிகர சக்திகளின் பலவீனமான நிலை.
- இ. சர்வதேச ரீதியில் பலமான முற்போக்கு அணிகளில் எதுவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாக எதிர்க்காதிருக்கும் நிலைமை.
- ஈ. தமிழீழ மக்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவவாதிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திசை வழியைத் தீர்மானிக்கும் சக்தியற்றவர்களாக இருத்தல்.

இந்த நான்கு நிலைகளிலும் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்துத் தேச விடுதலைப் போராட்டத்தின் தன்மையும் மாறும். தேச விடுதலைப் போராட்டமானது இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையாக மாறுவதும்கூட நிகழலாம்.

★ தேச விடுதலையும்,
சமுதாயப் புரட்சியும்.

தேச விடுதலை:

தமிழீழம் தனியான தேசம். அதன் இறைமையை மீட்டெடுப்பதே இன்றைய எமது கடமை, என்ற கருதுகோளை முன்கூட்டியே அனுமானித்துக் கொண்டுள்ளோம். இவ் அனுமானத்தின்படி, சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்தும், அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் நவகாலனியின் இரும்புப் பிடியில் இருந்தும் அரசியல், பொருளாதார விடுதலை பெறுவதற்காக தமிழீழத் மக்கள் நடாத்தும் போராட்டமே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேச விடுதலை என்பதாகும். அதாவது, தமிழீழத்திற்கும் சிங்களப் பேரினவாத அரசுக்கும் இடையேயுள்ள ஆக்கிரமிப்புத் தன்மை பெற்ற உறவை முறித்துக் கொள்ள நடக்கும் போராட்டமே தேசவிடுதலைப் போராட்டமாகும்.

இது இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் மாத்திரமல்ல, ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் ஆக்கிரமிப்புக்கும் எதிரான போராட்டமாகும். ஆகவே நவ-காலனியல் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் ஏகாதிபத்தியச் சார்பு வர்க்கங்களுக்கும், அவர்களால் பாதுகாக்கப்படும் பொருளாதார அமைப்புக்களுக்கும்எதிரான போராட்டமாகும்.

சிறிலங்கா அரசு ஒரு சுதந்திரமான அரசல்ல, அது ஏகாதிபத்திய சார்பு அரசாகும்: அதனது பொருளாதார, அரசியல் செயல்பாட்டின் ஒரு கட்டமே ஆயுத ஆக்கிரமிப்பாகும். ஆகவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டமாக மாத்திரம் கொள்வது பூரணமான விடுதலையாக இராதது மாத்திரமல்ல, சில மாற்றங்களுடன் இருக்கும் நவ-காலனித்துவ அமைப்பை வாழ வைக்கும் ஒன்றாகவே முடியும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் நவ-காலனியத்திற்கும் எதிரான போராட்டமானபடியால் அது தனக்குள் இருபிரதான அரசியல் போக்குகளைக் கொண்டதாய் இருக்கும். ஒன்று நவ-காலனித்துவம் முற்றாக அழியும்வரை போராட்டம், மற்றையது நவ-காலனியத்தின் தன்மையில் சில மாற்றங்களைச் செய்வதுடன் நிறுத்திக் கொள்ளக் கூடிய விதத்திலான போராட்டம். இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தவர்கள் ஊசலாட்டக் காரர்களாகவும், உறுதியற்றவர்களாகவும், அந்நிய நாடுகளிலேயே தங்கியுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஏகாதிபத்தியச் சார்பு வர்க்கங்கள் இப்போராட்டத் தலைவர்களாகவிருப்பார்கள். முதலாவது வகையைப் பொறுத்தவரையில் அது, இறுதி வெற்றிவரையான நீண்ட போராட்டமாக இருக்கும். தமிழீழத்தின் சுதந்திரத்திற்கு ஊறுசெய்யும் அனைத்துச் சக்திகளுக்கும் எதிரான போராட்டமாக அமையும். ஆகவே இது தமிழீழ மக்களை முழுமையாக அணிதிரட்டுவதையும் அவர்களில் பூரணமான தங்கி நிற்றலையும் கொள்கையாகக் கொண்டதாக அமையும்: முதலாளித்துவ அரசுகளில் தங்கி நிற்பதையும் விட, சோசலிச நாடுகளினதும் புரட்சி இயக்கங்களினதும் நட்பில் நம்பிக்கை வைத்துள்ளதாகத் திகழும்.

2. அரைப் பாட்டாளிகள் (போதிய வருவாய் இன்றித் தவிக்கும் சிறுபண்ட உற்பத்தியாளர்கள்.)
3. உதிரிப்பாட்டாளிகள்.
4. சிறுமுதலாளித்துவப் புத்திஜீவிகள்.
5. நடுத்தர சிறுபண்ட உற்பத்தியாளர்கள்
6. மூளை உழைப்பாளிகள்;

பின்வரும் சமூகத் தட்டுகளும் அதற்குள் உள்ளடங்கும்:

1. மாணவர்கள்.
2. பெண்கள்.
3. தொழில் இன்றித் தவிக்கும் இளம் சமுதாயினர்.

> நாம் சாதாரண மன உணர்வுக்கு இடம் அளித்துவிட்டாலோ, அன்றி நிலையை நிதானமாக எடை போட்டுப் பார்க்காமல் சிவப்புக் கொடிகளை அசைப்பதற்கு இடங்கொடுத்து விட்டாலோ அன்றி ஆதாரமற்ற போலித்தனமான புரட்சிகர வாய்ச்சவடாலினால் ஈர்க்கப்பட்டு அதிதீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ நாம் சீர்ப்படுத்த முடியாத தவறுகளை செய்து விடுவோம் என்பதை மறந்துவிடக்கூடாது.
>
> இளைஞர்களுக்கு
> "லெனின்"

சமுதாயப்புரட்சி:

சமுதாயப்புரட்சி என்பது பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் கீழ் நிலைக்குக் காரணமாகவுள்ள உற்பத்தி உறவுகளைத் தூக்கி எறிந்து, அவர்களின் மேன்மையான நிலைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய புதிய உற்பத்தி உறவுகளை ஆக்குவதற்காக அம்மக்களாலேயே நடைபெறும் ஒரு சமூகப் பலாத்கார நிகழ்ச்சியாகும்.

தமிழீழ யதார்த்த நிலையில் உழைக்கும் மக்கள் என்பது பின்வரும் வர்க்கங்களை உள்ளடக்கும்.

1. கிராமப்புற, நகர்ப்புறத் தொழிலாளர்கள்,

இன்றைய நிலையில் உழைக்கும் மக்களின் கீழ் நிலைக்குக்காரணமாகவுள்ள உற்பத்தி உறவுகள், சார்பு முதலாளித்துவ உற்பத்தி உறவுகளாகும். இதன் விளைவே நவ-காலனியல் பொருளாதார வடிவமாகும்.

இவ்வுற்பத்தி உறவுகளைப் பாதுகாக்கும், இதனால் பயன்பெறும் வர்க்கங்கள் பின்வருவனவாகும்.

1. ஏகாதிபத்திய சார்பு வகைத் தொழில் முதலாளி வர்க்கங்கள்;
2. நிதி மூலதன உடமையாளர்கள்;
3. போக்குவரத்து, கட்டிட நிர்மாண வர்க்கங்கள்.
4. உயர் அதிகாரத்துவ முதலாளி வர்க்கங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5. உயர் அதிகாரிகளும் படிப்பாளிகளும்.
6. பெரும் வர்த்தகர்கள், ஹோட்டல் துறையில் ஈடுபாடுள்ளவர்கள்.
7. பெரும் நில உடைமையாளர்கள்.
8. ஏகாதிபத்தியத்துடன் நேரடித் தொடர்புள்ள உற்பத்தி முதலாளிகள்.

தமிழீழம் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்ட பகுதியாக இருந்தாலும், மேற்கூறிய இவ்வர்க்கங்களே தமிழீழத்தின் ஆளும் வர்க்கங்களாகும். தமது ஆளும் நிலையைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வுக்காகவே இவர்கள் போராடுவார்கள். அவர்களை ஆட்சியதிகாரத்தில் இருந்து தூக்கி எறிவதே சமுதாயப் புரட்சியின் இலட்சியம் ஆகும்.

தமிழீழ சமுதாயப்புரட்சியானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தினூடாகவே நடைபெறும் போதுதான் தமிழீழ தேச விடுதலைப் போராட்டமானது நவ-காலனியல் ஆதிக்கத்திற்கு எதிரானதொன்றாகும். ஆகவே, தமிழீழ தேசவிடுதலைப் போராட்டத்தின் முடிவுடன் சமுதாயபுரட்சியின் 1வது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது என்பதே அர்த்தமாகும்.

தமிழீழ தேச விடுதலைப் போராட்டமானது சமுதாயபுரட்சியின் 1வது கட்டத்தைப் பூர்த்தி செய்யாததொன்றாக இருக்குமானால் இவ்வித தேச விடுதலையால் உழைக்கும் மக்கள் எந்தவித பயனும் அடைய மாட்டார்கள். சுதந்திர விடுதலைப் போரின் பின்பு விடுதலையடைந்த பல நாடுகளுக்கேற்பட்ட அதே நிலை இங்கு எமக்கு ஏற்படக்கூடாது.

எனவே தமிழீழ தேசவிடுதலையானது, தமிழீழசமுதாயபுரட்சியின் இந்த 1வது கட்டத்தைப் பூர்த்தி செய்யாவில்லையானால், பெருமளவு உழைக்கும் மக்களை தமிழீழ தேச விடுதலையை நோக்கி அணிதிரட்டமுடியாது போய்விடும். சுயவிருப்புடன் தியாகஞ் செய்யக்கூடிய இந்த மக்களை அணிதிரட்டாமல் தியாகத்துக்கு அஞ்சும் உயர் வர்க்கங்களை வைத்துக்கொண்டு எவ்விதம் போராட முடியும்?

## சமுதாயப் புரட்சியின் வெவ்வேறு வகைகள்:

அந்தந்த நாட்டின் ஸ்தூல தன்மையைப் பொறுத்துப் புரட்சியின் தன்மைகள் மாறுபடுகின்றன. இப்புரட்சிக்கான பெயர்கள் ஒவ்வொரு நாட்டினதும் வரலாற்றுடன் ஒட்டியே அமைந்துள்ளது. ஆகவே எமது பிரச்சனை பெயர்கள் அல்ல. சாரம்சமே பிரச்சனையாகும். எதிரி யார்? நண்பன் யார்? தலைவன் யார்? பிரதான செயல்பாட்டு அணி யார்? என்பதைப் பொறுத்தே புரட்சியின் தன்மைகள் தீர்மானிக்கப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட தேசத்தின் ஆட்சியானது கீழ்வரும் எதிரி யார்? என்ற அட்டவணைக்குள் கொடுக்கப்பட்ட வர்க்கத்தால் ஆளப்படும்போது, அவ் ஆட்சியைத் தூக்கி எறிவதற்குரிய சக்திகள் யார் யார் என்பதை அடுத்தடுத்த அட்டவணைகள் தெளிவுபடுத்துகின்றன.

| | எதிரி யார்? | நண்பன் யார்? | தலைவன் யார்? | பிரதான செயல் படும் வர்க்கம் எது? | புரட்சியின் தன்மை |
|---|---|---|---|---|---|
| 1. | நிலபிரபுத்துவம் | வர்த்தக வர்க்கம் | சிறு பட்டறை உற்பத்தியாளர்கள் | விவசாயிகள் | முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி |
| 2. | நிலபிரபுத்துவம் ஏகாதிபத்தியம் தரகு முதலாளித்துவம் | தேசிய முதலாளித்துவ வர்க்கம் | தொழிலாளி வர்க்கம் | விவசாயிகள் | புதிய ஜனநாயக புரட்சி |
| 3. | சார்பு முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் | ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான சில முதலாளிகள், பணக்கார விவசாயிகள் | தொழிலாளர் வர்க்கம் | தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், நகர்ப்புற சிறுபண்ட உற்பத்தியாளர்கள், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் | தேசிய ஜனநாயகப் புரட்சி |
| 4. | முதலாளித்துவம் | சிறு அளவான சிறு பண்ட உற்பத்தியாளர்கள் | தொழிலாளர்கள் | விவசாயிகள் தொழிலாளர்கள் புத்தி ஜீவிகள் | சோசலிசப் புரட்சி |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் போராட்டத்தில் — பெண்களின் பங்கு

ஒரு முதலாளித்துவக் குடியரசின் (அதாவது நிலம் தொழிற்சாலை, பங்குத் தொகைகள் முதலியவற்றில் தனிச்சொத்துடமையுள்ள நாட்டில்) உலகில் எப்பகுதியிலும் அதிக முன்னேற்றம் அடைந்த நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டில் கூட அது எவ்வளவு ஜனநாயக நாடாக இருந்தபோதிலும், பெண்களுக்கு ஆண்களோடு முழு அளவிற்குச் சமமான உரிமைகள் எந்தக் காலத்திலும் இருக்கவில்லை. மகத்தான பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்று இத்தனை ஆண்டுகளான பின்பும் கூட இந்நிலை இருந்து வருகின்றது.

அண்மையில் ஐ. நா. சபையில் பெண்கள் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட, பத்தாண்டுகளில் உச்சக்கட்டமான இவ்வாண்டு 10-7-85 தொடக்கம் 19-7-85 வரை உலக மாதர்களின் மன்றங்கள் கூடின.

சென்ற பத்தாண்டுகளில் நூற்றி இருபத்தொரு நாடுகளில் ஐ. நா. சபையால் திரட்டப்பட்ட விபரங்களின்படி வீட்டுக்கு வெளியேயும், உள்ளேயும், பெண்களால் செய்யப்படும் உழைப்பு உலகம் முழுவதும் செய்யப்படும் உழைப்பின் மூன்றில் இரண்டு பங்காகும். கல்வி, பயிற்சி வாய்ப்பு, வேலை வாய்ப்பு ஆகியவைகளில் பெண்களின் சதவிகிதம் மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும், சட்டமன்றங்களிலும், நிர்வாகங்களிலும், பெண்கள் பிரதிநிதித்துவம்குறைந்து, அங்கு எடுக்கப்படும் முடிவுகளில் பெண்களின் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படாமல் உள்ளது.

ஒரு பெண் இல்லத்தரசியாகவோ, தாயாகவோ, செலவிடும் உழைப்புக்கு எந்தவித ஊதியமோ, மதிப்போ கிடைப்பதில்லை. ஆனால் ஒரு நாளில் கிட்டத்தட்ட கால் பங்கு நேரம் இந்த உழைப்புக்காக பெண்களின் சக்தியும், நேரமும் செலவிடப்படுகின்றது. இங்கு ஊதியம் கொடுக்கப்படாததால் அது உழைப்பாகக் கருதப்படவில்லை. வீட்டுக்குள்ளே பெண்கள் செலுத்தும் உழைப்பின் மதிப்பு ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியில் 40% என ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளன.

வளரும் விவசாய நாடுகளில் விவசாயத்திலீடுபட்டிருக்கும் பெண்களுக்கு விவசாயத்தைப் பற்றிய நவீன கல்வியோ, பயிற்சியோ கிடைப்பதில்லை. இதனால் பெரும்பாலான பெண்கள் திறமையற்ற வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். இதன் காரணமாகப் பெண்களுக்கு தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பும் இல்லாமல் போய்விடுகின்றது.

இவ்வடிப்படையில் பார்க்கையில் முதலாளித்துவ ஜனநாயகம், சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பற்றி அலங்காரமான வார்த்தைகள் ஆயிரம் பேசினாலும், உண்மையில் எந்த வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில்கூட ஆண்களின் ஒடுக்குமுறையிலிருந்தும், ஆண்களை நம்பியிருக்கும் நிலையிலிருந்தும் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை. ஆனால் உண்மையில இந்நாடுகள் பெண்களுக்குச் சுதந்திரமும் சமத்துவமும் இல்லாதிருப்பதையும், உழைக்கும் மக்களுக்கும் சுரண்டப்படும் மக்களுக்கும், சமத்துவமும் சுதந்திரமும் இல்லாமல் இருப்பதையும், தமது இனிய வார்த்தைகளால் மூடி மறைக்கின்றனர்.

பொதுவாக ஒடுக்கப்பட்டவர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்கும், சுரண்டப்பட்டவர்களுக்கும் சுரண்டுபவர்களுக்கும், இடையே சமத்துவம் என்பது ஒருபோதும் ஏற்பட முடியாது. ஆண்களுக்குத் தரப்பட்டிருக்கும் சட்டபூர்வமான தனியுரிமைகளால் பெண்குலம் பாதிக்கப்படும் வரை, மூலதனத்தின் நுகத்தடியிலிருந்து தொழிலாளிக்கு விடுதலை கிடைக்கும் வரை, முதலாளி, நிலவுடைமையாளர், வணிகர் ஆகியோருடைய ஆளுமையிலிருந்து உழைக்கும் விவசாயிக்கு விடுதலை கிடைக்கும் வரை உண்மையான சுதந்திரம் என்பது கிடையாது.

ஐரோப்பிய நாடுகள் கல்வி, கலாச்சாரம், நாகரீகம், சுதந்திரம் போன்ற ஆர்ப்பாட்டமான வார்த்தைகளால் பெண்களுக்குரிய சட்டப்படியான ஒழுங்குகளை மூடி மறைத்தும் அவர்களின் போராட்ட வழிமுறைகளைக் கொச்சைபடுத்தித் திசைதிருப்பியும் வருகின்றது; சோசலிசத்துக்கு மாறுகின்ற எந்தத் தொழிலாளர் அரசுக்கும் இரட்டைக் கடமை இருப்பதை நாம் சிந்திக்க வேண்டும். அந்தக் கடமையில் முதற்பகுதியை ஒப்புநோக்கின் சாதாரணமானதாகவும், சுலபமானதாகவும் இருக்கிறது. ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களைத் தாழ்வானவர்களாக வைத்திருந்த பழைய சட்டங்களைப் பற்றியதே அது. மேற்கு ஐரோப்பியாவில் தோன்றிய எல்லா விடுதலை இயக்கங்களைச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேர்ந்தவர்களுமே வசதிகள் சொத்துடைமைகள் ரத்துச் செய்யப்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் சமம் என்று சட்டம் இயற்றப்படவேண்டும் என்று நெடுங்காலமாகவே கூறி வந்திருக்கின்றார்கள். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மூலதனத்தின் ஆதிக்கம் இருக்கும் வரையும், ஆணாதிக்கம் இருக்குமட்டும் இவர்களால் எதுவும் செய்ய முடியாதென்பதே உண்மையாகும். ஆனால் சோசலிச நாடுகளில் செய்ய முடிந்தது என்றால், அதற்கு காரணம் சோசலிச ஆட்சி அதன் ஆரம்பத்திலிருந்தே உழைக்கும் மக்களின் சக்தியாக சுரண்டலின் எல்லா வடிவங்களுக்கும் விரோதமான சக்தியாக செயற்பட்டு வந்ததேயாகும். நிலவுடைமையாளர்கள், முதலாளிகள், உழைக்கும் மக்களைச் சுரண்டுகின்ற வாய்ப்பை ஒழிப்பதை அது தன் கடமையாகக் கொண்டிருக்கின்றது.

உலகம் முழுவதும், முழுமையான அரசியல் சுதந்திரமுள்ள நாடுகளிலோ அன்றி, அதிகமான ஜனநாயகத்தைக் கொண்ட குடியரசுகளிலோ உழைக்கும் மக்களை ஏழ்மையிலும், கூலி அடிமைத்தனத்திலும், மற்றும் பெண்களை இரட்டை அடிமை நிலையிலும் வைத்திருக்கின்ற தனி உடைமை இல்லாமல், உழைக்கும் மக்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்வதைச் சாத்தியமாக்கவேண்டும்.

வீட்டில் செய்கின்ற வேலை காரணமாகப் பெண்கள் இன்னும் அடிமைத்தனமான நிலையிலே இருக்கிறார்கள். பெண்களுக்கு விடுதலை கொடுத்து ஆண்களுக்குச் சமமானவர்களாக்க வேண்டுமென்றால்; தேசியப் பொருளாதாரம் சமூகமயமாக்கப்படுவதும், பொதுவான பயனுள்ள உழைப்புக்களில் பெண்கள் ஈடுபடுவதும் அவசியம் ஆகும். அப்போதுதான் பெண்கள் ஆண்களுக்குச் சமமான நிலையை பெறுவர்.

இக்கருத்து உழைப்பின் உற்பத்தித்திறன், உழைப்பின் அளவு, நாளொன்றுக்கு வேலை செய்யும் நேரம், உழைப்பின் நிலைமைகள் போன்றவற்றில் பெண்களை ஆண்களுக்கு சமமாக வைக்கப் போராடாக நாம் சொல்லவில்லை. இன்றைய குடும்பத்தில் பெண்கள் வகிக்கும் நிலை காரணமாக அவர்கள் ஒதுக்கப்படக் கூடாது என்பதே எமது கருத்தாகும். இன்று பெண்கள் முழு உரிமைகளைக் கொண்டிருக்கும்போது கூட அவர்கள் அடக்கி வைக்கப்பட்ட பெண்களாகத்தான் இருக்கின்றார். இதன் காரணம், எல்லா வகையான வீட்டு வேலைகளும் அவர்களுக்கு ஒதுக்கப்படுவதுதான். வீட்டுவேலை என்பது பெரும்பாலுமே காட்டுமிராண்டித்தனமானதாகவே உள்ளது. இதில் பெண்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கக் கூடிய விதத்தில் எந்த அம்சங்களுமே இல்லையெனலாம்.

பொது உணவுச் சாலைகள், மற்றும் இதுபோன்ற நிறுவனங்களை நாம் உருவாக்கவேண்டும். இதன் மூலமே குடும்ப அடிமைத்தனம் என்ற நிலையிலிருந்து பெண்களை விடுவிக்க முடியும். தொழிலாளர்களுடைய விடுதலையைத் தொழிலாளர்களே முன்னின்று நடத்த வேண்டும் என்பதுபோல உழைக்கும் பெண்களின் விடுதலையும், உழைக்கும் பெண்களாலேயே முன்னெடுக்கப்படவேண்டும். இத்தகைய நடவடிக்கைகளானது, பழைய முதலாளித்துவ சமூகத்தில் பெண்களுடைய நிலையோடு ஒப்பிடுகின்றபோது, அடிப்படையில் ஒரு முழுமையான மாற்றத்தை அவர்களுடைய நிலையில் ஏற்படுத்தும்.

யுத்த காலங்களில் கூட பெண்கள் உழைக்கமுடியும். நாட்டின் விடுதலைக்காகப் போராடல், இராணுவத்துக்கு உதவி செய்தல், பிரச்சாரங்களை மேற்கொள்ளல்,

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார் அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி.

'பாரதி'

எனவே ஒரு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் நாம், விடுதலை சம்பந்தமாக தளத்தைத் தயார்படுத்தும் தீவிரமான பணிகளில், பெண்களுக்கு முழுமையான ஈடுபாடுகளைக் கொடுத்து இப்புதிய வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வதின் மூலமே புதியதோர் சமுதாயத்தை நிர்மாணிக்க முடியும். இது இன்றோ, நாளையோ நடந்து முடியக்கூடிய ஒன்றல்ல, பல வருடங்களின் பரிணாம வளர்ச்சியிலேயே நடைபெற முடியும்.

குடும்ப வேலைகளிலிருந்து பெண்களை விடுவிக்கக்கூடிய குழந்தை வளர்ப்பு நிலையங்கள், மருத்துவ நிலையங்கள் போன்றவற்றில் உழைக்கும் பெண்கள் செய்யக்கூடிய வேலைகள் ஸ்தாபன ரீதியில் அதிமுக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. எங்கே நிலவுடைமையாளர்களும், முதலாளிகளும், வணிகர்களும், இருக்கிறார்களோ அங்கே பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்களாக இருக்க முடியாது. முதலாளித்துவத்தால் சம்பிரதாயபூர்வமான சமத்துவத்தில்கூட முரணில்லாமல் இருக்க முடியவில்லை. இவ் முரண்பாட்டின் பட்டவர்த்தமான வெளிப்பாடுதான் பெண்களுக்குச் சமத்துவமில்லாமையாகும்.

(9ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாருக்காக சிலுவை சுமந்தார் யேசுநாதர்?

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகம் மூட நம்பிக்கையில் மூழ்கி, மக்கள் அரசனுக்குச் சேவைசெய்து, அரசனே கதியன்றி வேறு உலகம் இல்லையென மக்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலம் அது. அன்று மக்களின் விடிவுக்காய், மக்களின் மீட்சிக்காய் உழைத்து மக்களின் மீட்சிக்காகவே உயிர்நீத்து தம்மைத் தியாகியாக்கிக் கொண்ட உத்தமர் யேசுநாதரைத் தியாகிகள் வரிசையில் இம்மார்கழி மாதத்தில் நினைவுகூருகின்றோம். இவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, தச்சுத் தொழிலைத் தன் தொழிலாகக் கொண்ட ஒரு பாட்டாளியாவார். அன்றைய கால கட்டத்தில் சகல அடக்குமுறைகளுக்கும் எதிராக மக்கள் திரண்டெழக்கூடிய வகையில் கருத்துக்களை முன்வைத்துப் போராடிய போராளிகளில் யேசுநாதரும் ஒருவராவார்.

அத்தகைய ஒரு விடுதலைப் போராளியை, ஒப்பற்ற வழிகாட்டியை ஒரு சார்பு மக்களோடும், மதத்தோடும் இணைத்துப் பார்ப்பதை விட்டு, அவர் உலகத்திலுள்ள சகல மக்களினதும் துன்பங்களின் விடிவிற்காகப் போராடிய பொதுவானவராகப் பார்ப்பதே சாலவும் சிறந்ததாகும்.

சமுதாயம் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். பழைய கருத்துக்களுடன் புதிய கருத்துக்களைச் சேர்த்து ஒரு விடிவைக் காண முடியாதென்பதை முழுமையாக நம்பினார். அதை அன்று தனது பாணியில், 'ஒருவருமே கோடி வஸ்திரத்தை பழைய வஸ்திரத்தோடு இணைக்க மாட்டார்கள். அப்படி இணைத்தால் பழைய வஸ்திரம் அழிந்து பாவிக்க முடியாத நிலை ஏற்படும்போது புதிய வஸ்திரமும் பாவிக்க முடியாது நிராகரிக்கப்படும்' என்று உரைத்தார்.

நலிந்து கிடந்த ஒரு இனத்தை மட்டுமல்ல, அனைத்து மக்களையும் நேசித்து அனைத்து மக்களுக்கும் தனது புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினார். ஆனால் வழமைபோல் அவருடைய புரட்சிக் கருத்துக்களைச் சமுதாயம் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லைத்தான். ஏனெனில் பழமையில் மூழ்கி அரசனே கதியென்றிருந்த அச்சமுதாயத்திற்கு இக்கருத்துக்கள் வேம்பாகக் கசந்தது யதார்த்தமானதே.

யேசுநாதரையும் அவருடைய கருத்தரங்குகளையும் பற்றியறிந்த ஆட்சியாளர்கள், ஆட்சிக்கெதிராக (தமக்கெதிராக) மக்களைக் கிளர்ந்தெழச் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் யேசுநாதரைக் கைதுசெய்து அவருடைய கருத்துகள் மக்கள் மத்தியில் பரவாமல் இருப்பதற்காக அவரையே கொன்றார்கள். மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டிருந்த யேசுவைப் பிடிப்பதில் ஆட்சியாளருக்கு இருந்த சிரமத்தை யேசுவின் கருத்துக்களைப் பரப்பிய அவரின் நண்பனான யூதாஸ் என்பவனே நீக்கிவைத்தான். முப்பது வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டு புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கப் புறப்பட்ட யேசுவைக் காட்டிக் கொடுத்தான். ஆட்சியாளரும், 'ஆட்சிக்கெதிராக மக்களைத் தூண்டியவன்' என்ற குற்றச்சாட்டின் பேரில் உலகின் விடிவிற்காய் உழைத்த யேசுவை சிலுவையில் அறைந்து கொன்றனர்.

ஒரு விடுதலைப் போராளியைக் கொல்வதால், அவன் நேசித்த விடுதலையையோ, அவனது கொள்கையையோ கொன்றுவிட முடியாது என்பதுபோல அன்று அநீதியை எதிர்த்து மக்களின் நல்வாழ்வை நேசித்த யேசுவின் கொள்கையும் அழிந்துவிடவில்லை. இன்றும் உலகில் அநீதியை எதிர்த்து நின்று, தமது சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காகத் தம்மையே அர்ப்பணிக்கும் ஆயிரம் ஆயிரம் யேசுக்கள் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் அநீதியை அகற்றித் தம் மக்களின் அடிப்படை உரிமைக்காக போராடிக் கொண்டே இருக்கிறார்கள்.

இதையே இன்று தமிழீழ விடுதலைப் போராளிகளும், மக்களும் செய்கின்றனர். அன்று யேசுவைச் சிலுவை சுமக்க வைத்தபோது, அழுது புலம்பிய மக்களைப் பார்த்து

**'நீங்கள் எனக்காக அழ வேண்டாம்!**
**உங்களைக் காக்கவும், உங்கள் சமுதாயத்தைக் காக்கவும் அழுங்கள்'**

என்றார். இன்றும் விடிவிற்காய் உழைத்து அரச சித்திரவதைக் கூடங்களில் இன்னலிலும், துன்பத்திலும் வாழும் ஒவ்வொரு யேசுக்களும் மக்களைப் பார்த்துக் கூறுவது இதையேதான். எம்மைப் பற்றி அதாவது எமக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி எப்போ உணரத் தொடங்குகிறோமோ, எப்போ சமுதாயத்தைப் பற்றி உணரத் தொடங்குகிறோமோ அதன் பின்பே உண்மையான விடுதலை என்பது சாத்தியமாகும்.

(10ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இஸ்லாமியருக்கெதிரான ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாவது பெறவேண்டிய இஸ்லாமிய சமூகம் ஆகக் கூடியதாக 3 அல்லது 4 உறுப்பினர்களை மட்டுமே பெறக்கூடிய நிலை உருவாகியுள்ளது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள தமிழர்களுக்கு இப்புதிய திட்டம் அதிகம் பாதகம் விளைவிக்கா விட்டாலும், இஸ்லாமிய சமூகத்தின் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையில் அவர்களின் பிரதிநிதித்துவம் முற்றாகக் குறைக்கப்பட்டு அவர்களை அரசியல் அனாதைகள் ஆக்கிவிடும் என்பதை நாங்கள் நாம் காணக்கூடியதாக உள்ளது.

இப்படியாகத் திட்டமிட்டு ஒரு சமூகப் பிரதிநிதித்துவ ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் ஐ. தே. கட்சி (U.N.P.) அரசாங்கத்தின், இந்நடவடிக்கையை வெறுமனே பார்த்து சகித்துக்கொண்டு இருக்கும் இஸ்லாமிய தலைவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பற்றி என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

இஸ்லாமிய மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த, வாழ்ந்து வரும் அவர்களுக்கே சொந்தமான நிலங்களையெல்லாம் அரசாங்கத்தின் உதவியோடு சிங்கள காடையர் பறித்தெடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இப்புதிய திட்டத்தை அமுல்படுத்தி வேறொரு விதத்தில் இம் மக்களை அழித்து ஒழிக்கத் திட்டம் தீட்டியுள்ளார்கள்.

இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தை மத ரீதியாகப் பிரித்தாளத் திட்டம் தீட்டியிருக்கும் சிறிலங்கா இனவாத அரசின் கபடத்தனத்தைத் தெளிவாகப் புரிந்து ஒவ்வொரு மதசார்பினரும் நிதானமாகச் செயல்பட வேண்டும். இது எமக்குக் கடந்தகால வரலாறு (தமிழ்பேசும் இஸ்லாமிய மக்களுக்கும், தமிழ் பேசும் இந்து கிறிஸ்தவ மக்களுக்கும் இடையே கலவரங்களை உருவாக்கியமை) கற்றுத்தந்த பாடமாகும். இந்நடவடிக்கை எமது நாட்டிற்கு பொருந்துவது மட்டுமல்லாது உலகில் பல சமூகங்கள் வாழும் சகல நாட்டிற்குமே பொருந்தும். இத்தந்திரத்தைப் பாவித்து முதலாளித்துவ வர்க்கம் ஒரு சமூகத்தினரை எப்போதும் தமக்குச் சாதகமாகக் கையாண்டு வருகின்றது.

பறிக்கப்பட்ட எமது இறமையை மீட்கப்புறப்பட்ட நாம் சிறிலங்கா இனவாத அரசினதும், ஏகாதிபத்தியத்தினதும் சதிவலைக்குள் விழுந்துவிடாது எமது விடுதலையை வென்றெடுக்க ஒன்றிணைந்து போராடவேண்டும்; இதன் மூலமே ஒவ்வொரு சமூகப்பிரிவினரும் தமக்குரிய முழுமையான உரிமையுடனும் மனித நேயத்துடனும் வாழமுடியும். ●

---

> **மனிதரின் வாழ்க்கையை நிர்ணயிப்பது அவர்களின் உணர்வு அல்ல. சமூக வாழ்க்கையே மனிதரின் உணர்வை நிர்ணயிக்கிறது.**
>
> **'மார்க்ஸ்'**

## விடுதலைப் ...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாட்டின் கலாச்சார மட்டத்தை மிகச் சிறந்த வகையில் எடுத்துக்காட்டுவது, அங்கே பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சட்டபூர்வமான அந்தஸ்தேயாகும். இது ஒரு ஆழமான உண்மையாகும். இதன் அடிப்படையில் பார்க்கையில் சோசலிச அமைப்புத் தவிர்ந்த வேறெந்த அமைப்பாலும், பெண்களுக்கான மிக உயர்ந்த கலாச்சார நிலையைக் கொடுக்க முடியாதென்பதை நாம் உணரமுடியும்.

பெண்களின் சம்பிரதாயபூர்வமான சமத்துவத்திற்காகப் போராடாமல் பொருளாதார மற்றும் சமூகரீதியான சமத்துவத்திற்காகப் போராடுவது உழைக்கும் பெண்கள் இயக்கத்தின் கடமையாகும். பெண்கள் உணர்ச்சிகள் மழுங்கிப்போகும் இந்நிலையிலிருந்து அவர்களை விடுதலை பெறச்செய்ய, அவர்களைச் சமுதாய ரீதியில் பயனுள்ள உழைப்பில் ஈடுபடச் செய்வதே முக்கியமானதாகும்.

இது வெகுஜனங்களை அரசியலில் ஈடுபடச் செய்வதுபோல் சுலபமானதல்ல. ஏனென்றால் முதலாளித்துவத்தில் தான், பாதியளவில் இருக்கும் பெண்குலம், இருமடங்கு ஒடுக்கப்படுகின்றது. உழைக்கும் பெண்களும், விவசாயத்தில் ஈடுபடும் பெண்களும் மூலதனத்தால் ஒடுக்கப்படுகிறார்கள். அடுத்ததாக வீட்டு வேலை என்ற அடிமைத்தனத்திலும் சிக்கியிருக்கிறார்கள். பெண்களுக்குச் சமத்துவம் மறுக்கப்பட்டு, அவர்களை ஒடுக்கும் மூலவேர்களை அறுத்தெறிய வேண்டும்.

சமூகப் படுத்தப்பட்ட குடும்பச் சேவைகளுக்கு மாற்றுவதன் மூலம், வீட்டடிமைத்தனத்திலிருந்து பெண்களை விடுதலை செய்து அவர்களுடைய உண்மையான விடுதலைக்கு வழிவகுக்க முடியும். இதுசோசலிசஅமைப்பை உருவாக்குவதன் மூலமே சாத்தியமாகும். இம்மாற்றம் மிகக் கடுமையானதே. ஏனென்றால் இது மிக ஆழமாக வேரூன்றிவிட்ட மரத்துப்போன ஒழுங்கமைப்பு சம்பந்தப்பட்ட விடயமாகும். ஆனால் மாற்றம் ஆரம்பமாகிவிட்டது. அதற்குப் போதிய சக்தி கொடுத்து முடுக்கி விட்டுள்ளோம். அதுவும் புதிய பாதையில் புறப்பட்டுவிட்டது. ★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யாருக்காக . . .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

**'நீங்கள் உலகுக்கு வெளிச்சமாக இருக்கிறீர்கள் மலையின் மேல் இருக்கின்ற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது'**

(மத்—5.14)

விடுதலைப் போராளிகளாகிய நாம், மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற அதே வேளை மக்களுக்கு முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும். இருளைப் போக்க ஒளி எப்படி முக்கியமாகின்றதோ, அதே போல பிற்போக்கான எண்ணங்களோடு, பிற்போக்குவாதக் கொள்கையை வளர்த்துக்கொண்டு இருள் சூழ்ந்த மாயை உலகத்தில் இருக்கின்ற மக்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டியவர்கள் விடுதலைப் போராளிகளே. எனவே தான் விடுதலைப் போராளிகள் கொள்கை வாதிகளாக மட்டுமல்லாது, இலட்சியவாதிகளாகவும் இருக்கவேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கின்றது. இதன் அடிப்படையில் செயற்படுகின்ற விடுதலைப் போராளிகள் மக்களுக்குள் மக்களாக இருக்கின்ற அதே வேளை, தம்மிடமுள்ள நல்ல பழக்க வழக்கங்களினாலும், நல்ல செயற்பாடுகளா[illegible] முற்போக்குக் கொள்கைகளினாலும் மக்களை வழி நடத்து[illegible] வேளை மலைமேலுள்ள [illegible] மானது, எப்படி [illegible]க்கப்பட முடியாததோ, அப்படி பிரகாசித்துக் கொள்வர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு துன்பங்களை அனுபவிக்கும் மக்களுக்காக சிலுவையைச் சுமந்தார். அவ் வழி வந்த இளம் சந்ததியினர் இன்று ஒடுக்குமுறையால் ஏற்படும் துன்பங்களுக்கெதிராக, துமுக்கிகளைச் சுமக்கத் தயாராகி விட்டனர். இன்றைய சிறிலங்கா ஆட்சியாளர்களோ மக்களைத் துப்பாக்கி சுமக்கும் நிலைக்குத் தள்ளினர்.

இப்போராளிகளுக்கு இன்று முள்முடி இல்லைதான். ஆனால் முட்கள், கற்கள் நிறைந்த காடுகளையெல்லாம் இன்பமாகவே தழுவுகிறார்கள். நிட்சயமாக இவர்களின் பயணம் [illegible] மலையை நோக்கிப் போகப்போவதில்லை. இன்று மக்களை [illegible]டும் துன்பத்தில் ஆழ்த்தி வைத்திருக்கும், இனவெறி ஆட்சியாளர்களை கழு[illegible] [illegible] கல்வாரிக் கிளைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உறுதி. ★

## மரணித்தும் வாழும் மறவர்கள்

தமிழீழ மக்களின் விடுதலையே தமது நோக்கமாக செயற்பட்டு தமிழீழத்தின் மற்றைய குடும்பங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்து இறுதி நேரத்திலும் இராணுவத்திற்கு அடிபணியாது வீர மரணமெய்திய அக்குடும்பத்திற்கும், மற்றைய தோழர்களை இழந்து ஏங்கும் குடும்பத்தாரோடு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் அம் மறவருக்கு வீர வணக்கத்தைச் செலுத்[illegible].

| | | |
|---|---|---|
| ஐ. | பரமானந்தம் | பாலம்பிட்டி (மன்னார்) |
| ப. | கருணைமலர் | ,, |
| ப. | உதயகுமார் | ,, |
| ப. | கிருஷ்ணகுமார் | ,, |
| | சிவகுருநாதன் | ,, |
| | காத்தான் | தச்சனாமருதமடு |
| | வல்லிபுரம் | பளை |
| | பாலா | கிளிநொச்சி |
| | ஜீவன், கியாஸ் | ,, |

★



[illegible]றந்த போது
பாலின்றித் தவித்தபோது
ஆமிக்காரன்—
அம்மாவை இழுத்தபோது
அழுதேன் தான்...
இனிநான் அழப்போவதில்லை
சுடுங்கள்!
எத்தனைமுறை
வேண்டுமானாலும்.
மூடர்களே!
உங்களை நினைக்க
சிரிப்புத்தான் வருகிறது.
தாய் தமிழீழக் குழந்தை
என்பதனால்
தவழும் போதே
தடுக்கின்றீர்கள்.
எனக்குப் பின்னால்
எத்தனையோ பேர்
தப்பிக்கத்தான் போகிறார்கள்
அவர்களிடமிருந்து
நீங்கள்
தப்பாமற்தான் போவீர்கள். ★

www.tamilarangam.net



## எமது நோக்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கங்களால் இறுதிவெற்றிய டையமுடியாதென்பதை,கடந்தகாலங்களில் நடந்த தாக்குதல்களும், அதன் விளைவாக மக்களிடமிருந்து அந்நியப்பட்டு வருவதையும் எம்மால் உணரக்கூடியதாக உள்ளது. இம்மக்களின் எண்ணத்தில், இரத்தவெறிபிடித்த இராணுவத்தின் நடவடிக்கை ஒரு தொடர் நிகழ்ச்சியாகிவிட்டது, இந்நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டாமா? தொடர்ந்தும் அப்பாவி மக்கள் என்ன காரணத்துக்காக இறக்கின்றோம் என்று தெரியாத நிலையில் (அதாவது வேட்டைக்காக மிருகங்களைச் சுட்டுக் கொல்வதுபோல்) கொல்லப்பட வேண்டுமா? இவைகள் தொடரத்தான் வேண்டுமா? நாம் இதிலிலிருந்து காப்பாற்றப்பட மாட்டோமா? தாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இன்னல்களை விடுதலை இயக்கங்கள் அறியாமல் இருக்கின்றார்களா? என்ற விரக்தியும் வெறுப்பும் உருவாகுவது நியாயமானதே. இன்னும்தவறான, போர்த் தந்திரங்களிலிருந்தோ, அன்றித் தவறான சக்திகளின் ஆளுமைக்குட்பட்டு அதிலிருந்து மீளமுடியாமலோ, எம்மை நிரந்தர அகதிகளாக்கப் போகிறார்களா என்ற எண்ணமும் மக்களிடம் எழுவது நியாயமான ஒன்றே.

இவ்விடுதலை இயக்கங்களின் விபரீத நடவடிக்கைகளிலிருந்து தம்மை மீட்டெடுக்கும் நோக்கில் மக்கள் இன்று கூர்மையாக விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளைப் பகுத்தாராயத் தொடங்கியுள்ளார்கள். இந்நடவடிக்கைகளின் பிரதிபலிப்பாக, மக்கள் தம்மைக் காப்பாற்றக் கூடிய; தம்மிலிருந்து பிரிந்து அந்நியப்படாமல் இருக்கக்கூடிய தன்மை கொண்ட ஓர் இயக்கத்தை மேலும் வலுப்படுத்தத் தொடங்குவார்கள்; இப்படியாக மக்களிடமிருந்து அந்நியப்படாது மக்களின் ஆதரவால் [illegible]ப்படுத்தப்படும் இயக்கத்தால் மட்டுமே விடுதலையை வென்றெடுக்க முடியும்.

முன்னைய காலகட்டத்தில் தமிழீழத்தின் எந்த மூலை முடுக்கிலாவது போராளிகளால் இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டால் அதன் எதிர்விளைவு மிகவும் பயங்கரமானதாகவே அமைகிறது. வீதிகளில் அடையாளம் காண முடியாத பிணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது, எந்த விதகாரணமுமின்றி எண்ணுக்கணக்கற்ற இளைஞர்கள் சித்திரவதைக் குட்படுத்தப்படுகிறார்கள், உடமைகள் தீயிட்டுக் கொழுத்தப்படுகின்றது, இது எல்லாவற்றிலும் உச்சக்கட்டமாக மக்கள், தமிழகத்திற்கும், வேறு வெளிநாடுகளுக்கும், தமது பாரம்பரியப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். மறுபக்கத்தில் அரசு, இறந்த சிங்கள இராணுவத்தினரை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இன்று தேசிய பாதுகாப்புப் படையென்னும் இனவெறி ரீதியிலான அமைப்பையும் ஏற்படுத்துமளவிற்கு வெற்றிபெற்றுவிட்டது.

மேலும் ஒரு ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் மக்கள் இழப்புக்குள்ளாவது சாதாரண நிகழ்ச்சிதான். அதில் நாம் கருத்து முரண்பாடுகள் கொண்டவர்களல்லர். ஆனால் இதுவரை நடந்த வன்முறைச் சம்பவங்களையெல்லாம் சேர்த்து மொத்தமாகப் பார்க்கையில் இராணுவத்தைவிட, மக்கள் 9 தொடக்கம் 10 மடங்கு அதிகமாக இழப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். அவ்வளவு மக்களும் விடுதலை பற்றி ஏதும் அறியாமலும், தமது எதிரிக்கெதிராகப் போராடாமலும் உள்ள நிலையில் இழப்பதென்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அடிப்படையில் புதிய ஒரு சமுதாயத்தை நிர்மாணிக்கப் புறப்பட்ட நாம், இழப்புகளையும்— பெறுபேறுகளையும்கணிப்பிட்டே செயற்பட வேண்டும். ஒரு முழுமையானதும், இறுதியானதுமான போராட்டத்தை முன்னெடுக்க முன்னரே எமது மக்களின் இழப்புக்களின் வேகம் பெறுபேறுகளின் வேகத்தைவிட அதிகமாக இருந்தால் எமது போராட்டம் இறுதி வடிவம் பெறுமா? இலட்சியத்தை எட்ட முடியுமா? என்ற சந்தேகங்கள் சிந்திக்கக்கூடிய மக்கள் மத்தியில் உருவாகுவது நியாயமானதே.

எதிரி வீதியால் செல்லும்போது மறைந்திருந்து திடீரெனத் தாக்குதல் என்பது ஒன்றும் பெருங்கடினமான காரியமல்ல. ஆனால் சிறிது நேரத்தில் எதிரிகள் நரவேட்டையாட வரும்போது நாம் கையாலாகாதவர்களாகி நில்லாது, எதிரிகள் தாக்குதல்களில் ஈடுபடும்போது எதிர்த்துநின்று அவர்களிடமிருந்து மக்களை மீட்பதே பெருங்கடினமான காரியமாகும். எந்நிலையிலும் நாம் ஏந்தியிருக்கும் துமுக்கிகள் எதிரியை அழித்தொழிப்பதற்கு மட்டுமல்ல; அவர்களிடமிருந்து எம்மக்களைப் பாதுகாப்பதற்குமே என்பதில் நாம் போதிய தெளிவு பெற்றிருத்தல் வேண்டும்.

நாம் மக்களைப் பற்றிச் சிறிதும் கவனத்திற்கொள்ளாது, அவர்களை அரசியல்மயப் படுத்தாது பார்வையாளராக வைத்து நாம் உதைபந்தாட்டப் பந்தயத்தில் வீரர்கள் ஆடுவதுபோல் வீரசாகசங்களைச் செய்வோமாயின், பார்வையாளர்களான மக்களின் எண்ணம் சிறந்த வீரசாகசங்களையே விரும்பும் திட்டமிட்டு எமது விடுதலையை நசுக்கப் புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள் வலுப்படும்போது வீரசாகசங்கள் காட்ட முடியாத நிலையில், மக்கள் மத்தியில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர். இதைத் தற்போது யாவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரும் அவதானிக்க முடியும். விடுதலை இயக்கங்களின் தெளிவற்ற இந்நடவடிக்கையில் வெறுப்படைந்த அரசியல் தெளிவற்ற மக்கள், எதிர்காலத்தில் எதிரி தம்மீது திணிக்கப்போகும் கொடூரத் தன்மையையும் அறியாது, தமது எதிரியையே நண்பனாக்கிக் கொள்ளும் நிலைக்குச் செல்வர். இதன்விளைவு பயங்கரமானதாகவே அமையும்.

இஸ்ரேலியப் படைகள் லெபனானுக்குள் ஊடுருவியபோது அம்மக்கள் ஸ்ரேலியக் கூலிப்படைகளுக்கும், அவர்களுடைய கவசவாகனங்கள், பீரங்கி போன்றவற்றுற்கும், தமது கலாச்சாரத்தின்படி விருந்தினர்களை வரவேற்பது போன்று அரிசி எறிந்து வரவேற்றனர். ஆனால் அவர்களால் எவ்வளவு போராளிகள் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்சள்? இன்னும் எவ்வளவு போராளிகள் தொடர்ந்தும் அணுவணுவாகச் சித்திரவதை செய்யப்பட்டும் வருகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. இம்மக்களும் ஒருகாலத்தில் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியவர்கள்தான். ஆனால் போராளிகள் வேறு தளத்திலிருந்து (லெபனான்) போராடுவதற்குரிய முறையில் வேலைத்திட்டத்தை மாற்றாமலும், அம்மக்களுக்கு தமது நிலைப்பாட்டை விளக்காமலும் அம் மக்கள் மத்தியில் வீரசாகசங்களைச் செய்வதன் மூலம் அதாவது தாங்கள் புரட்சியாளர்கள் என்பதைக் காட்டும் நோக்கோடு வாகனங்களில் பெரிய ஆயுதங்களைப் பூட்டிக்கொண்டும் தாங்களும் ஆயுதம் தரித்த நிலையில் நெருக்கமாயுள்ள இடங்களில் வேகமாக வாகனங்களையோடி விபத்துக்களை உருவாக்கி அதையும் பலத்தின் அடிப்படையில் தீர்த்து, வேறு பல தரக்குறைவான மக்கள் வெறுக்கத்தக்க நடவடிக்கைகளில் மிக வீரத்துடன் செயற்பட்டு வந்தமையால் மக்களிடையேயும், எதிரியையும், நண்பனையும் புரிய முடியாத நிலை ஏற்பட்டது. பின்னர் தமது வேலைத் திட்டங்களையும் மாற்றி மக்களுக்கு தமது நிலைப்பாடுகளைத் தெளிவு படுத்திய போது மீண்டும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுடன் ஒன்றித்து சியோனிச, ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக போராடுகின்றார்கள். இந்த நிகழ்ச்சிப் போக்கை விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொரு அமைப்புகளும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இன்னும் பல நாடுகளில் போராளிகள் மக்களைத் தெளிவான பாதையில் நடைமுறைப்படுத்தத் தவறியதால், ஏகாதிபத்தியச் சக்திகள் போராளிகளிடமிருந்து மக்களைக் கபடமாகப் பிரித்தெடுத்து, மிக அற்பச் சலுகைகளோடு மக்களைப் போராளிகளுக்கு எதிராக திருப்பிப் போராட்டங்களை நசுக்கிய சரித்திரங்களை நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டும். விடுதலைப்போராளிகளாகிய நாம் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலேயே அவர்களின் ஆதரவுடனேயே நமது நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை நாம்ஒருபோதும் மறந்துவிடலாகாது. இதுவே எமக்கும், கூலிப்படைகளுக்கும் உள்ள வித்தியாசமாகும். நாம் மக்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதால், எம்முடன் அவர்களும் ஒன்றிணைந்து தம்மால் இயன்ற வழிகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பர். இப் பிரிக்க முடியாத பிணைப்பின் காரணத்தினாலேயே எம்மை இராணுவத்தால் வெல்ல முடியவில்லை.

மேலும் போராளிகள் உச்சக்கட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சாதாரண மக்கள் பங்களிப்புகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மேலாக பார்த்த நாம், இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும் எனவே மேற்குறிப்பிட்ட தவறுகளிலிருந்து தம்மை நெறிப்படுத்தி (பேச்சளவிலல்லாது) மக்களையும் போராட்டத்தில் நடைமுறையில் இணைத்துப் போராட முன்வரவேண்டும். இதன் மூலமே சகல ஒடுக்குமுறைகளிலிருந்தும், அடிமை நுகத்தடியிலிருந்தும், மக்களை முற்றாக விடுபடச் செய்து சுரண்டலற்ற சமுதாயத்தை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும். ★

## "தமிழீழத்தின் குரல்"

வானொலி ஒலிபரப்பு

அலைவரிசை: S. W. 49M
S. W. 41M

**தமிழ்**

புதன், சனி, ஞாயிறு — காலை 8-00 — 8-30 மாலை 4-00 — 4-30 இரவு 7-00 — 7-30

**ஆங்கிலம்**

புதன் — மாலை 4-30 — 5-00
சனி — காலை 8-30 — 9-00 இரவு 7-30 — 8-00
ஞாயிறு — மாலை 4-30 — 5-00

**சிங்களம்**

புதன் — காலை 8-30 — 9-00 இரவு 7-30 — 8-00
சனி — மாலை 4-30 — 5-00
ஞாயிறு — காலை 8-30 — 9-00 இரவு 7-30 — 8-00

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்ப்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகின்றது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோருக்கும் படிக்கக் கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்பு திணைக்களம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

P.L.O.T
45 Central Rd
Worcester Park Surrey UK

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்